# இயல் : மூன்று

## இராமலிங்க அடிகளார் தத்துவங்கள்

### 3.1. பசி நீக்கம்

இராமலிங்க அடிகளாரின், சமரச சுத்த சன்மார்க்கத்தை ஒரே சொல்லாற், கூற வேண்டுமாயின் ஜீவகாருண்யம் என்று கூறலாம் என்கிறார் ஊரன் அடிகள்.[1] ஜீவகாருணியமே மோட்ச வீட்டின் திறவுகோள் ஆகும். எல்லா உயிரும் தம் உயிர் போல் பார்த்தலே ஜீவகாருணியத்தின் இலட்சியம். அதற்கு பசிநீக்கம் செய்தல், கொலை மற்றும் புலை தவிர்தல் அவசியம் ஆகும். இராமலிங்க அடிகளாரைப் பொருத்தவரை பசி நீக்கமே ஜீவகாருணியம் என்பதாகும்.

உயிருக்கும் வாழ்க்கைக்கும் மிக அவசியமான உணவு தான் இன்றியமையாத தேவைகளுள் முதன்மையாயும் மிகப் பெரியதாயுமுள்ளது.[2]

"ஜீவகாருணிய ஒழுக்கமே கடவுள் வழிபாடு
ஜீவகாருணிய ஒழுக்கமே சன்மார்க்கம்
ஞானவழி என்பதும் சன்மார்க்கம் என்பது ஜீவகாருணிய ஒழுக்கம்
ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள்விளக்கம்
ஜீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பம்
பசித்துன்பமே நரகம்
உண்டு பசி நீங்கிய இன்பமே மோட்சம்"[3] என்கிறார் இராமலிங்க அடிகளார்.

சுத்த சன்மார்க்கமே ஜீவகாருணிய வாழ்வு எனக் கொள்ளப்படும் என்கிறார் சுவாமி சரவணானந்தா.[4]

அரசியல், விஞ்ஞானம், கலை, சமயம் முதலியவற்றில் ஈடுபடுவதற்கு முன்பு மனித இனத்திற்கு முதலில் உணவு வேண்டும், குடிக்க நீர் வேண்டும், உடுக்க உடையும் தங்க இடமும் வேண்டும். எனவே அது உயிர் வாழ்வதற்கு வேண்டி உடனடியான இன்றியமையாத பொருட்களை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும், இவ்வுற்பத்தியின் விளைவாக குறிப்பிட்ட மனித சமூகம் அல்லது குறிப்பிட்ட சகாப்தம் ஒரு குறிப்பிட்ட அளவு பொருளாதார வளர்ச்சியை அடைகிறது. இந்த உற்பத்தியும், பொருளாதார வளர்ச்சி நிலையுமே அம்மனிதனின் அடித்தளம் போன்றவை, அம்மக்களின் அரசு நிறுவனங்கள், சட்டக் கொள்கைகள், கலை ஆகியவை ஏன் சமயக் கோட்பாடுகள் கூட இந்த அடித்தளத்தின் மீது உருவாக்கப்படுகின்றன. எனவே இதனை ஆதாரமாகக் கொண்டு தான் அவற்றை விளக்க முடியுமே அன்றி இதுகாறும் செய்து வந்தாற்போல் நேர்மாறாக அல்ல.[5] என்பதன் மூலம் காரல் மார்க்ஸ் அனைவருக்கும் அடிப்படையில் கிடைக்க வேண்டிய உணவின் அவசியத்தை கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஆப்ரகாம் மாசுலோ என்ற உளவியல் அறிஞர் கூற்றுப்படி மனிதன் தன்னிலை உணர்வுடன் இருக்க வேண்டும். அப்போது தான் சமுதாயம் சிறந்து விளங்க முடியும் என்கிறார். எனவே அவர் ஏழு வகையான நிலை பற்றி கூறுகிறார்.

1. உயிர் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகள் (உணவு, உடை, இருப்பிடம்)
2. உயிர்வாழப் பாதுகாப்புத் தேவை
3. உயிர்களிடத்து அன்பு காட்டுதல்
4. தன்மதிப்பை உணர்ந்து நினைத்தல்
5. அழகியல் கோட்பாடு
6. தன்னை உணர்ந்து வெளிப்படுத்துதல்
7. தன்னிலை உணர்வு.[6]

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்திற்கும் ஆதாரமாக விளங்குவது உணவு ஆகும். உணவு இல்லை என்றால் உடல் நலம் குறையும், உடல் நலம் குறைந்தால் மனநலம் குறையும் எனவே உணவு மிக முக்கியமானது ஆகும்.

உடல் நலமும், மனநலமும் குறையும் போது ஆரோக்கியமான சமுதாயம் அமையாது. எனவே உணவு இன்றியமையாதது ஆகும்.

இதை திருவள்ளுவர் திருக்குறளில்,

"மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்" [7] என்கிறார்.

இராமலிங்க அடிகளார் பசி நீக்கத்தை ஜீவகாருணியமாக கொண்டார். ஆன்ம நெகிழ்ச்சியாகிய ஜீவகாருணிய ஒழுக்கம் சன்மார்க்கத்தின் முதல் நிலையாகும். ஞான வழி என்பது சன்மார்க்கம் என்பதும் ஜீவகாருணியம் ஒழுக்கம் என்பது இராமலிங்க அடிகளாரின் கருத்தாகும்.[8]

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"[9]

பசியை பொருத்துக் கொண்டு தவம் செய்வதைவிட, அடுத்தவர் பசியை நீக்குவது அதை விட சிறந்தது என்கிறார் திருவள்ளுவர்.

ஜீவர்கள் பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கப்படுவதை அனுபவிக்க கண்டபோதாயினும் கேட்ட போதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதே தெய்வ வழிபாடு ஆகும் என்கிறார் இராமலிங்க அடிகளார்.[10]

ஜீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசமாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளாள் சிருஷ்டிக்கப்பட்ட படியால் ஒருரிமையுள்ள சகோதரர்களேயாவர் இதனால் தான் ஒரு சீவனுக்கு ஏற்படும் பாதிப்பு மற்ற சீவர்களுக்கு ஆன்ம உருக்கத்தை ஏற்படுத்துகிறது. இது பழைய 'ஆன்ம உரிமையாகும்' என்கிறார்.[11]

ஜீவகாருணியம் இரண்டு வகைப்படும் அவை அபர ஜீவகாருணியம், பர ஜீவகாருணியம் ஆகும். பசியினால் வருந்துன்பமும் கொலையினால் வருந்துன்பமும் தவிர தாகம், பயம், எளிமையால் வருந்துன்பங்களை மாற்றுவது அபர ஜீவகாருணியம் ஆகும். பசியினால் வரும் துன்பத்தையும், கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்திப்பது பர ஜீவகாருணியம் ஆகும்.[12]

ஒரு ஜீவன் பசியினால் கொல்லப்படும் என்பதையறிந்து காருணியத்தால் பசியை நீக்கி உயிர் பிழைக்கும்படி செய்பவர் வேறுவகையால் உயிர்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி அந்த கொலையால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்யாமலிரார்கள்.[13] இதன் மூலம் கொலையினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்தலையும், பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்தலையும் ஜீவகாருணியத்தின் முக்கிய இலட்சியமாக கூறுகிறார் இராமலிங்க அடிகளார்.

## 3.2. மனித தேகத்தின் மாண்புகள்

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி,

> “முக்தி அடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாகலின்
> வேறு தேகத்தால் அடைவது அரிதாதலின் எவ்விதத்தி
> லாயினும் அதனைப் பாதுகாத்தல் வேண்டும்”[14] என்கிறார்.

ஜீவகாருணியமாகிய பசி நீக்கம் மனிதர்களிடையே பெரும்பாலும் நடத்த வேண்டும் என்கிறார். “மனித தேகம் மற்ற ஜீவ தேகம் போல இலேசிலே எடுக்கக் கூடாதாகலாலும், மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும், அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்த தேகம் வரும் என்கின்ற நிச்சியமில்லாமையாலும், இந்த மனித தேகம் முக்தியின்பம் பெறுவதற்கே எடுத்த தேகமாதலாலும்.

இந்த மனித தேக மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம். பசியாற்றுவிக்கின்ற ஜீவகாருணிய விதியை பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்க வேண்டுமென்றும் கடவுள் விதித்திருகின்ற படியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்தி செய்விக்கின்ற ஜீவகாருணிய ஒழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டும்”[15] என்கிறார்.

“இந்த பவுதீக உடம்பிலிருக்கிற நீ யாரெனில், நான் ஆன்மா, சிற்றணு வடிவன். ஷை அனு கோடி சூரியப் பிரகாசம் உடையது.லலாடஸ்தான மிருப்பிடம்,கால்பங்கு பொன்மை, முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சக்திகளாகிய 7 திரைகள் உண்டு.

அவையாவன ;

கருப்புத் திரை – மாயாசக்தி
நீலத் திரை – கிரியா சக்தி
பச்சைத் திரை – பராசக்தி
சிவப்பு திரை – இச்சாசக்தி
பொன்மைத் திரை – ஞான சக்தி
வெண்மைத் திரை – ஆதி சக்தி
கலப்புத் திரை – சிற்சக்தி”[16] என்கிறார்.

“ ‘ஞானசபை’ என்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற்குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத் தான் முறையே சிற்சபை அல்லது ஞானசபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது” [17],என்று மனித தேகத்தை ஞானசபை என்கிறார் இராமலிங்க அடிகளார்.

“மனித தேகமே சுவர்க்கம், நரகம் இருகின்ற இடம். பிரம பதம், விஷ்ணு பதம், ருத்திர பதம், மயேசுவர பதம், சதாசிவ பதம், முதலிய பதங்களின் இடம் இந்த மனித தேகத்தின் கண்டம் முதல் உச்சிவரையில், ‘இந்தப் பதங்களுக்கு சுவர்க்கமென்று பெயர்.” [18] என்று மனித தேகத்தின் மாண்புகளாக இராமலிங்க அடிகளார் கூறுகிறார்.

லியானார்டோ டாவின்சியின் மோனோலிசா ஓவியம். மைக்கேல் ஏஞ்சலோவின் மனித ஓவியங்கள் மற்றும் சிற்பங்கள், இந்தியாவின் கோயில் கோபுரங்களில் உள்ள மனித உடல் சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் மனித தேகத்தின் அழகியலின் வெளிப்பாடாக அமைகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

“ஒன்றாய் உயிராய் உடல்தோறும் நீ இருந்தும்
என்றும் அறியார்கள் ஏழைகள் தாம் பூரணமே” [19]

என்று மனித தேகத்தின் மேன்மையைப் பட்டினத்தார் கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

“உடம்பினை முன்னம் இழுக்கென்றுருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேன்”[20]

“உடம்பா ரழியின் உயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே உயிர் வளர்த்தேனே”[21]

என்று உடம்பின் அவசியத்தையும் மேன்மையையும் திருமூலர் கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி கடவுள் ஆன்ம வியாபக மாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க சிலாவிக்கிரக பூத தாரு முதலியவைகளில் (கடவுளை) வெளிப்படுத்திக் கொள்வது மந்த ஞாயம் என்கிறார்.[22]

கடவுள் மனித தேகத்தில் தான் உடனே வெளிப்படுவார் எனவே மனித தேகத்தின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் அறியமுடிகிறது. எனவே அத்தேகம் பசிக் கொடுமையால் அழிந்து விடக் கூடாது என்று ஜீவகாருணியமாகிய பசி நீக்கத்தை மனிதர்களிடையே பெரும்பாலும் நடத்த வேண்டும் என்பது அவசியமாகிறது. என்பதை அறிய முடிகிறது.

## 3.3. பசியினால் வரும் கொடுமைகள்

ஜீவர்களுக்கு பசி அதிகரித்த காலத்தில்,

ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது
அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைகின்றது
அது மறையவே புருடத்துவம் சேர்ந்து விடுகின்றது
அது சேரவே பிரகிருதத்துவம் மழுங்குகின்றதுஅது மழுங்கவே
குணங்களெல்லாம் பேதப்படுகின்றன
மனம் தடுமாறிச் சிதறுகின்றது
புத்தி கெடுகின்றன
சித்தம் கலங்குகின்றது
பூதங்களெல்லாம் புழுங்குகின்றன
வாதபித்த சிலேட்டுமங்கள் நிலை மாறுகின்றன
கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது
நா உலர்ந்து வறளுகின்றது
நாசி குழைந்து அழல்கின்றது

தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது

கை கால் சோர்ந்து துவளுகின்றன

வாக்குத் தொனிமாறிக் குளறுகின்றது

பற்கள் தளருகின்றன

மலசல வழி வெதும்புகின்றது

மேனி கருகுகின்றது

ரோமம்வெறிக்கின்றது

நரம்புகள் குழைந்து நைகின்றன

நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன

எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றது

சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது

ஈரல்கரைகின்றது

இரத்தமும் சலமும் சுவறுகின்றன

மாமிசம் குழைந்து தன்மைகெடுகின்றது

வயிறு பகீரென்றுறெரிகின்றது

தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன

உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அனுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன.

பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது ஜீவர்களுக்கெல்லாம் பொதுவாவேயிருகின்றது. என்று பசிக் கொடுமையால் ஏற்படும் அவதிகளைப் பற்றி கூறுகிறார் இராமலிங்க அடிகள்.[23]

பசி வேதனை என்பது நரக வேதனை,சனன வேதனை, மரண வேதனைகளுங் கூடி முடிந்த வேதனை என்கிறார்.[24] அப் பசி வேதனையைப் போக்க அகம், புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கின்ற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோட்ஷ இன்பமே ஆகாரத்தினாலுண்டாகும் திருப்தியின்பம் என்கிறார்.[25]

மேலும் இராமலிங்க அடிகளார் பசியும் கடவுளால் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவி என்கிறார். பசியில்லா விடில் ஜீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரையொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள். எதிர்பாராத பஷேத்தில் உபகாரச் செய்கை தோன்றாது. அது தோன்றாத போது ஜீவகாருணியம் விளங்காது, அது விளங்காத போது கடவுள் அருள் கிடைக்கமாட்டாது என்கிறார். இதன் மூலம் ஜீவகாருணியம் தளைக்கவும் கடவுளின் அருளைப் பெருவதற்கும் பசி கடவுளால் ஏற்படுத்தப்பட்ட "உபகாரக் கருவி" [26] என்கிறார். மேலும் சமுதாயம் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழவும் வழிவகுப்பதை அறியமுடிகிறது.

ஔவையாரும் தனது நல்வழிப்பாடலில்,

"ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏல்என்றால் ஏலாய் – ஒரு நாளும்
எந்நோ அறியாய் இடும்பை கூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது" [27] என்கிறார்.

ஒருநாள் உணவு உண்ணாமல் இருயென்றாலும், இரண்டு நாளுக்கு சேர்த்து உண் என்றாலும் வயிறு கேட்காது. இந்த வயிற்றோடு வாழ்வது அரிது என்று ஔவையார் கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்கிறார் ஔவையார்,

"மானங் குலங் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை–தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்" [28] என்கிறார்.

மணிமேகலைப் பாடல் வரிகள்,

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" [29]

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" [30]

"மக்கள் தேவர் என இருசார்க்கும்
ஒத்த முடிவின் ஓர்அறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே" [31]

"மக்கள் யாக்கை உணவின் பிண்டம்"[32]

மேற்கண்ட மணிமேகலைப் பாடல் வரிகள் பசி நீக்கமே 'மெய்ந்நெறி' வாழ்க்கை என்றும், 'அறம்' என்றும் உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவர் என்றும் உணவின் வெளிப்பாடே மக்கள் உடம்பின் வெளிப்பாடு ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

"பசிப்பிணி மருத்துவன்" [33] என்ற புறநானூற்றுப் பாடல்வரிகள் பசியைப் பிணியென்றும் உணவை மருந்து என்றும், அந்த பசிப்பிணியைப் போக்க உணவு கொடுப்பவனை மருத்துவன் என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" [34] என்கிறார் திருவள்ளுவர்.

பிச்சை எடுத்து உயிர் வாழ்வது மனிதனின் விதியென்று, இந்த உலகைப் படைத்த ஆண்டவன் விதித்திருந்தால், அவனே பரந்து கெடுக என்கிறார் திருவள்ளுவர்.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசி என்னும்
தீப்பிணி தீண்டல் அரிது"[35]

என்று திருவள்ளுவர் கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க ....."[36]

பசி நீக்கத்தின் அவசியத்தை சிலப்பதிகாரப் பாடல் வரிகள் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இத்தகைய பசியைப் போக்குவதே ஜீவகாருணியம் என்கிறார் இராமலிங்க அடிகளார், எனவே பசி நீக்கத்தையே ஜீவகாருணியமாக கூறுகிறார்.

## 3.4. ஜீவகாருணியம்

இராமலிங்க அடிகள் ஜீவகாருணியமாகக் கூறுவது "பசி என்கின்ற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எறிகின்ற போது ஆகாரத்தினால் அவிக்கின்றது தான் ஜீவகாருணியம்.

பசியென்கிற விஷக் காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருணியம்.

கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவ தேகங்கள் ஆலயங்கள் பசியினால் பாழாகுந்தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே ஜீவகாருணியம்.

கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற ஜீவரது தத்துவக் குடும்பம் முழுவதும் பசியினால் நிலைதடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்பம் முழுவதும் நிலைபெறச் செய்வதே ஜீவகாருணியம்.

பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே ஜீவகாருணியம்.

பசியென்கிற விஷம் தலைக்கேறி ஜீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கஞ் தெளியச் செய்வதே ஜீவகாருணியம்.

பசியென்ற கொடுமையாகிய தேள் வயிற்றில் புகுந்து கொட்டுகிற போது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தை தீர்ப்பதே ஜீவகாருணியம்.

நேற்று இராப்பகல் முழுவதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்ற பாவி இன்றும் வருமே, இதற்கென்ன செய்வோம்! என்று ஏக்கங் கொள்கின்ற ஏழை ஜீவர்களது ஏக்கத்தை நீக்குவது தான் ஜீவகாருணியம்.

வெயிலேறிப் போகின்றதே! இனி பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது! என்று தேனில் விழுந்த ஈயைப்போல, திகைகின்ற ஏழை ஜீவர்களுடைய திகைப்பை நீக்குவது தான் ஜீவகாருணியம்.

இருட்டிப் போகின்றதே இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்! என்ற விசாரத்தில் அழுத்திய ஏழை ஜீவர்களது– விசாரத்தை மாற்றுவதே ஜீவகாருணியம்.

நடந்து, நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது இனி இப்பாவி வயிற்றுக் கென்ன செய்வோம்? என்று கண்ணீர் வடிகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து கண்ணீரை மாற்றுவதே ஜீவகாருணியம்.

பகற்பொழுதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது வேறிடங்களிற்போக வெட்கந் தடுக்கின்றது, வாய் திறந்து கேட்க மானம் வலிக்கிறது, வயிறு எரிகின்றது, – உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்? என்று மனமும் முகமுஞ் சோர்ந்து, சொல்லுவதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங்கண்ட ஊமையைப் போல மனம் மறுகுகின்ற மானிடகளாகிய ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே ஜீவகாருணியம்.

நாம் முற்பிறப்பில், பசித்தவர்கள் பசிக் குறிப்பறிந்து பசியை நீக்கி இருந்தால், இப்பிறப்பில் நமது பசிக் குறிப்பறிந்து பசியை நீக்குவதற்கு பிறிதொருவர் நேர்வார், அப்போது அப்படி நாம் செய்ததில்லை. இப்போது நமக்கு இப்படி செய்வாருமில்லை என்று விவகரித்துக் கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துன்பத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே ஜீவகாருணியம்.

தேக முழுவதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து, நினைத்து நெருப்பிற் படுத்து, நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல, அடி வயிற்றில் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே – ஜீவகாருணியம்.

நேற்றுப் பட்டினி கிடந்தது போல இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் பாலிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும், பட்டினி சகியா நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியை குறிப்பதும் பெரிதல்ல, வார்த்திப திசையால் மிகவும் சோர்ந்து நமது தாய், தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்து விடுவார்களே!

இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்? என்று எண்ணி, எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப் போல் பசி நெருப்பும், பய நெருப்பும், விசார நெருப்பும் உள்ளே மூண்ட படி இருக்க கன்னப்புடையில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர் கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே ஜீவகாருணியம்.

பசியில் வருந்துகின்றவர்கள் எந்ந தேசத்தாராயினும் எந்த சமயத்தாராயினும் – எந்த ஜாதியாராயினும் எந்த செய்கையாராயினும் அவர்கள் தேசவொழுக்கம், சமயவொழுக்கம், ஜாதி வொழுக்கம், செய்கையொழுக்கம் முதலினவைகளைப் போதித்து விசாரியாமல் – எல்லா ஜீவர்களிடத்தும் கடவுள் விளக்கம், பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே – ஜீவகாருணியம்.

சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ அகாரத்தால் பசி நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்த போது, பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருணியம்.[37]

பசியை நிவர்த்தி செய்து கொள்ளத்தக்க புவன போக சுகந்திரங்களைப் பெறுதற்குரிய அறிவு இருந்தும், பூர்வ கர்மத்தாலும், அஜாக்கிரதையாலும், அச்சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி வருத்தத்தை நீக்கித் திருப்தி இன்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய “ஜீவகாருணியம் என்கின்ற திறவு கோலைக்” கொண்டு தான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவை திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும் என்கிறார்.

ஒருவருடைய வறுமைக்கு அவர் முற்பிறவி பலனே காரணம் என்றும் அவருக்கு உணவு வழங்கினால் அவருடைய பாவத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்று நம்பபட்ட

நிலையை மாற்றி, பசியால் ஜீவதேகம் அழியாமல் பாதுகாப்பதன் அவசியத்தை ஜீவகாருணியமாக இராமலிங்கர் வழியுறுத்துகிறார்.

## 3.5. வறுமைச் சூழ்நிலைக்கு காரணங்கள்

மக்களின் வறுமை நிலைக்கு காரணம் அவர்களின் விதியின் அடிப்படையில் அல்ல என்கிறார் காரல் மார்க்ஸ், அது திட்டவட்டமான சதி என்கிறார்.

வறுமையும், கொடுங்கோன்மையும், அடிமைநிலையும் என்றும் நிலையான விதிகளின் காரணமாகவோ, தெய்வீக நியதிகளின் காரணமாகவோ அல்லது மாற்ற முடியாத இயற்கை விதிகளின் காரணமாகவோ தோன்றுவதில்லை. அவை திட்டவட்டமான உற்பத்திமுறை, அதற்குப் பொருத்தமாக உள்ள சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் விளைவே, இந்த உற்பத்தி முறையும் சமூக நிறுவனங்களும் தமக்கிடையே போராட்டம் நடத்துகின்ற வர்க்கங்களாக அமைகிற மக்களால் உருவாக்கப்படுகின்றன, அவர்களால் தூக்கியெறியப்படுகின்றன. [38]

“ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகி உலகியல் நடத்தல் வேண்டும்”[39]

என்பதே இராமலிங்க அடிகளார் விருப்பம் ஆகும்.

மக்களின் வறுமை நிலைக்கு காரணம் தொழில் அடிப்படையிலான ஜாதிய ஏற்பாட்டால் ஆகும். “மனுதர்மம்” [40] நால்வகை வர்ணங்களையும், அவர்களுடைய தொழிலையும் பற்றிக் குறிப்பிடுகிறது.

> உலக நியதி நின்று நிலைக்கும் பொருட்டாக நால்வருணத்தாருக்கும் உரிய கடமைகளைத் தனித்தனியே கடவுள் விதித்தார்.

அந்தணர் வேதம் ஓதியும், ஓதிவித்தும், யாக வேள்விகள் புரிந்தும், புரிவித்தும், செல்வராயின் பிறர்க்கு ஈந்தும், வறிஞராயின் செல்வரிடம் ஏற்றும் வாழத்தக்கவராயினர்.

பிரஜா பலிபாலனம் செய்வது, ஈகை, வேள்விகள் புரிவது, வேதபாராயணம் செய்விப்பது, விஷய சுகங்களில் மனத்தை அலையவிடாமல் உறுதியாக நிற்பது, மன்னர் கடமையாகும்.

வாணிபர்க்கு ஆநிரைகளைக் காத்தல், தானம் கொடுத்தல், கடலாரம்,மலையாரம், கனிபொருள், விளைப்பொருள், தானியங்கள் இவற்றை வியாபாரம் செய்தல், வட்டிக்கு விடுதல், பயிர்த்தொழில் செய்தல் ஆயிவற்றை விதித்தார். ஏவலரான சூத்திர மக்கள் மேலே சொன்ன மூவர்க்கும் பொறாமையின்றிப் பணிபுரிதல் ஒன்றையே முதன்மையாகக் கொள்ளக் கடவரென்றும் அவர்களுக்கு பணித்தார்.

இவ்வாறு சில மக்களின் உழைப்பைச் சுரண்ட சாதிய முறை இருந்தது. பிராமணர்களும், சத்திரியர்களும் ஆதிக்க வர்க்கமாக இருந்ததையும் அந்த இரு பிரிவினருக்கும் நலன் பயக்கக்கூடிய நீதியே சமூக நீதியாக இருந்தது.

இவை அனைத்தும் கடவுள் மற்றும் கர்மவினைப்படி என்றும் காலத்தால் மீற முடியாத தன்மையாக உருவாக்கப்பட்டது. நால்வருண விதிகளை மீறுபவர் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். தொழில் அடிப்படையில் வர்ணாசிரம தர்மம் பிரிக்கப்பட்டு தொழில் துறை முன்னேற்றம் ஏற்படாமல் போனது, வறுமை நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

ஆட்சியார்களின் பாராமுகமும், முதலாளித்துவத்தின் கடுமையான பொருளாதாரச் சுரண்டல் போன்றவற்றால் சாதிய அடிப்படையில் உயர்ந்த சாதியினரும், ஆட்சியாளர்களும்,

முதலாளிகளும் வசதிபடைத்தவர்களாக மாறினார்கள். இந்திய சாதியமைப்பு அடிமைக் கூறுகளையும், நிலவுடமைக் கூறுகளையும் கொண்டது ஆகும். பிறப்பின் அடிப்படையில் சூத்திரரும், பஞ்சமரும் நிலவுரிமையற்றவர்கள், தொண்டூழியம் செய்ய வேண்டியவர்கள் இந்திய சூழலில் சாதி அமைப்புக்கு எதிரான போராட்டம் அடிமை மற்றும் நில பிரபுத்துவத்திற்கு எதிரான போராட்டம் ஆகும்.

இதை இராமலிங்க அடிகளார்,

"தத்துவ வொழுக்கம் பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப்பட்டிருகின்றன, தொழிலொழுக்கம் பற்றிச் சாதிகள் ஏற்படுத்தப்பட்டிருகின்றன, தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு, சாதி ஏற்பாடு, முதலிய கட்டுப்பாட்டு ஆச்சாரங்கள்.

ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சிவ சன்மார்க்க சத்திய ஞான ஆச்சாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால் மேல்படி காருணியம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, ஆனந்த சித்தி முக்தியைப் பெறக் கூடுமே யல்லாது, இல்லாவிடில் கூடாது" [41] என்கிறார்.

உழுபவர்கே நிலம் என்று முதன்முதலில் கூறியவர் இராமலிங்க அடிகளார் ஆவார்.[42] ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் சமுதாய வாழ்க்கை வடிவங்கள், ஏன் மனிதர்களின் சிந்தனா முறை கூட இறுதியில் உற்பத்தி முறையைப் பொறுத்தவையாகும். உற்பத்தி முறை மாறும் போது சமுதாய வாழ்க்கை முழுவதும் மாறும் எனவே மனித சமுதாயத்தின் வரலாறு என்பது எல்லாவற்றிற்கும் மேலாக, உற்பத்தி முறைகள் மாறுவதைப் பற்றிய வரலாறு ஆகும். சமுதாயத்தில் நடைபெறும் மாற்றங்களுக்கான இறுதிக் காரணங்களை உற்பத்தி முறையின் மாற்றங்களில் தேட வேண்டும்.[43]

ஆதிக்க வர்க்கத்தின் நெருக்கடியால் ஒடுக்கப்படும் வர்கங்களின் ஏழ்மையும் இன்னல்களும் மேலும் அதிகமாகின்றது என்பது குறிப்பிடதக்கது.[44]

எந்த ஒரு இயந்திரத்தாலும் எந்த வகையான ஆற்றலாலும் சமுதாயத்திற்குத் தனியாக சேவை புரிய முடியாது, மனிதர்களின் உழைப்பு நடவடிக்கை மூலம் தான் உழைப்புக் கருவிகள் உற்பத்திச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே மனிதர்கள் உற்பத்தி சக்திகளாவார்கள்.

அடிப்படை உற்பத்திச் சாதனங்கள் யாரிடம் உள்ளன என்பதையும் உற்பத்திப் போக்கில் மனிதர்களிடையே எவ்விதமான உறவுகள் நிலவுகின்றன என்பதையும் உழைப்பின் உற்பத்திப் பொருட்களை மனிதர்கள் தம்மிடையே எப்படிப் பகிர்ந்து கொள்கின்றனர் என்பது அவசியம். [45] இந்தியா போன்ற சாதியை அடிப்படையாக கொண்ட நாடுகளில் உழைப்புகருவிகள் உழைப்பாளிகளுக்கு சொந்தமாக இல்லை, ஒரு வேளை உணவுக்காக தன் உழைப்பை விற்பவனாகிறான்.

சமுதாயமானது ஒடுக்குபவர்கள், ஒடுக்கப்படுபவர்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளதற்கு முடிவு கட்டி மனிதனை மனிதன் சுரண்டும் வாய்பே இல்லாமல் தோற்றுவிப்பது அவசியம். உழைப்பு போதுமான உருவாக்கம் பெறாத சமூகங்களில் உழைப்பு என்பதே ஒரு சாபமாகவும் தண்டனையாகவும் கருதப்படுகிறது. உழைப்பு உருவாகாத சூழலில் அறிவு சுயாதீனமான ஓர் ஆற்றலாக உருவாவதும் தடைபடும்.

உடைமைச் சமூகத்தில் உழைக்கும் மனிதன் தான் ஒரு படைப்பாளி, ஓர் உற்பத்தியாளன் என்ற மனித சாராம்சத்தை இழந்து, தனது உழைப்பிலிருந்தும் உற்பத்திக் கருவிகளிலிருந்தும் உற்பத்தியாகும் பொருளிலிருந்தும், தனது சமூகத் தன்மையிலிருந்தும் அந்நியமாகி அவலநிலையில் வாழ்கிறான்.

இவ்வாறு தொழிலை பாரம்பரியமாக கொண்ட சாதிய முறை, மக்கள் நலனை கண்டு கொள்ளாத ஆட்சி முறை, உழைப்பைச் சுரண்டும் முதலாளித்துவ முறை மூலமாக மக்கள் ஒரு வேளை உணவுக்குக் கூட வழியற்றவர்களாக்கப்பட்டு வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

உழைக்கத் தெரிந்தவன் மனிதன், மனித சாராம்சம் என்பது அவன் உழைப்பவன் என்பதாகும், உழைப்பே மனிதனை விலங்கிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. குரங்காக இருந்த மனிதன் முதுகை நிமிர்த்தி நடக்கத் தொடங்கியதில், கைவிரல்களைப் பயன்படுத்தி கருவிகளைக் கையாண்டதில் மொழியை உருவாக்கிக் கொண்டதில், சிந்தித்தல் என்று ஆற்றல் கொண்ட வகையில் மூளை வளர்ச்சி பெற்றதில் உழைப்பே தீர்மானகரமான, முடிவான பாத்திரம் வகிக்கிறது.[46]

"…….கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே – நிதம்
பரிதவித் தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே……" [47] என்கிறார் பாரதியார்.

எனவே மனிதன் உழைக்காமல் இருந்ததால் வறுமை நிலைக்கு வரவில்லை இத்தகைய சமூக அமைப்பு முறை அவன் உழைப்பைச் சுரண்டி விட்டது என்பதை அறிய முடிகிறது. சிலரால் பிழைப்பு நடத்த ஏற்படுத்தபட்ட அமைப்பு முறையே சாதிய முறைகள், சுரண்டல் ஆட்சிமுறைகள், முதலாளித்துவ முறைகள் ஆகும். இதை இராமலிங்க அடிகளார் எதிர்கிறார், மேலும் மாற்றத்தை விரும்புகிறார்.

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி" [48] என்கிறார்.

"…….. சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்திய சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுதல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே" [49]

"சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள் எல்லாம் பாத்திரம் அன் றெனவே...." [50]
"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே....." [51] என்கிறார் .

"ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் – எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை
சூத்திரனுக்கு கொரு நீதி – தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடு மாயின் அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்" [52]

என்று மருதநாயகம் பிள்ளை கூறுவது குறிப்பிடதக்கது ஆகும்.

"பலவேத சாத்திரம் பாரு பாரு
ஏச்சலில்லாதவர் பிழைக்கச் செய்த மார்க்கம்"[53]
"ஒரு நான்கு வேதமென்னும் நூல் ஆறொன்றும்
நானென்றும் நீயென்றும் சாதியென்றும்
நாட்டினார் உலகத்தோர் பிழைக்கத்தானே"[54] என்கிறார் அகத்தியர்.

இராமலிங்க அடிகளார்,

"இருட் சாதித் தத்தவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டு...."[55]

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலை நீ....."[56]

"சாதி சமயச் சழங்கைவிட் டேன்அருட்
சோதியைக் கண்டேனடி...."[57]
"சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
சன்மார்க் ஞான சபைநிலை பெற்றது"[58]

"மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது
வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது"[59]

போன்ற திருவருட்பா வரிகளும் சாதி, சமயம், வர்ணசிரமதர்மம் ஒழிந்தால், சமூகத்தில் ஏற்றத் தாழ்வு நீங்கும், ஜீவகாருணியமாகிய பசிநீக்கம் அதிகரித்து சமுதாயத்தில், வறுமை ஒழியும். கொலை, களவு போன்ற செயல்கள் நடைபெறாது என்பதை அறியமுடிகிறது.

முதலாளித்துவ முறையை இராமலிங்க அடிகளார் கடுமையாக எதிர்கிறார். அது மக்களை வறுமைநிலைக்கு தள்ளுகிறது என்பதையும் அவர் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

"கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்

குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே"[60]

"எளியரை வலியார் அடித்தபோது ஐயோ
என்மனம் கலங்கிய கலக்கம்
தெளியநான் உரைக்க வல்லவன் அல்லேன்
திருவுளம் அறியுமே எந்தாய்!
களியரைக் கண்டு பயந்தஎன் பயந்தான்
கடலினும் பெரியது கண்டாய்
அளியர்பால் கொடியர் செய்தவெங் கொடுமை
அறிந்தஎன் நடுக்கம்ஆர் அறிவார்"[61] என்கிறார்.

"வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக் கொண்டொட்டியுள் இருந்தீர்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே"[62] என்கிறார்.

முதலாளித்துவ உற்பத்தி முறையில் தொழிலாளரின் உழைப்பில் ஊதியம் வழங்கப்படாதபகுதியிலிருந்து 'உபரி மதிப்பு' முதலாளிகளால் அபகரிக்கப்படுகிறது. [63]

முதலாளித்துவ சமூகத்தில் 99% உழைக்கும் மக்களின் உழைப்பு மற்றும் வருமானம் 1% முதலாளிகளால் உறிஞ்சப்படுகிறது. வறுமையாளர் மேலும் வறுமை நிலைக்கு செல்கிறார்.

பணக்காரர் மேலும் பணக்காரர் ஆகின்றார். இதனால் உணவுக்குக் கூட வழியில்லாமல் உழைக்கும் மக்கள் ஆளாக நேரிடுகின்றது. இதனால் வசதி படைத்தோர் சமூகத்தில் ஏற்றத்தாழ்வை நீக்கி சமமாக்க தம் தேவைக்கு மேற்பட்டதை மற்றவருக்கு (வறுமையாளருக்கு) ஜீவகாருணியமாக வழங்க வேண்டும் என்பது இராமலிங்க அடிகளார் கருத்தாக அமைகிறது.

ஸ்ரீ நாராயண குருவின் அபயக்கிரகம் என்ற கொள்கையும் இந்த கருத்தை வழியுறுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். ஜீவகாருணியத்தின் மூலம் ஒருவேளை உணவுக்கு ( வறுமை நிலைக்கு ) தன் உழைப்பை விற்காமல் தன் உழைப்புக்கு உரிமையாளராக மாற்ற வாய்ப்புள்ளது. வறுமையாலும், சரியான உணவு கிடைக்காததாலும் இந்தியா, குடியரசு நாடாகி 61 ஆண்டுகளுக்குப் பிறகும் நம் நாட்டில் உள்ள 42 சதவீதம் குழந்தைகள் சரியான உணவு கிடைக்காமல் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருக்கிறார்கள். உலகிலேயே வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அதிகம் இருப்பது இந்தியாவில் தான். ஊட்டச் சத்து குறைபாட்டுடன் உள்ள 3 குழந்தைகளில் ஒரு குழந்தை இந்தியக் குழந்தை. ஆப்பிரிக்காவை விட(22%) 2மடங்கு அதிகம் ஊட்டச்சத்து குறைபாடு இருப்பது இந்தியாவில் என்கிறது ஹங்கமா அறிக்கை[64] (Hungana – Hunger and Malnutrition). எதிர்காலச் சமுதாயம் குழந்தைகள் ஆரோக்கியத்துடன் சிறந்து கல்வி கற்று விளங்கவும் பள்ளிகளில் மதிய உணவு திட்டம் ஏற்ப்படுத்துவது, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் கிடைத்திட பொது விநியோகத்திட்டம் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படுவது போன்ற திட்டங்களுக்கு முன்னோடித் திட்டமாக இராமலிங்க அடிகளாரின் பசிப்பிணி போக்கும் ஜீவகாருணியத் திட்டத்தை கொள்ளலாம்.

“இனி ஒரு விதி செய்வோம் –அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக் குணவில்லை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்
.....மனிதர் உணவை மனிதர் பறிக்கும்

வழக்கம் இனி உண்டோ ?"[65]

என்று பாரதியார் கூறுவது குறிப்பிடத்தக்கது.

மேலும்,

"....பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்
வயிற்றுக்குச் சோறிட வேண்டும்–இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றுப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்திட வேண்டும்"[66]

என்று பாரதியார் கூறுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

" எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் " [67] என்கிறார் தாயுமானவர்.

இராமலிங்க அடிகளார் வறுமையால் வாடும் மக்களைக் கண்டு கொள்ளாத அரசாங்கத்தை வெறுத்தும் ஆட்சி மாற்றத்தையும் விரும்புகிறார் என்பதை அவர் பாடல் மூலம் அறியமுடிகிறது.

"அச்சந் தவிர்த்தே அருளிற் செலுத்துகின்ற
விச்சை அரசே விளங்கிடுக – நச்சரவம்
ஆதிக் கொடிய உயிர் அத்தனையும் போய் ஒழிக!
நீதிக் கொடி விளங்க நீண்டு"[68] என்கிறார்.

"நிடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
நண்ணிடா அரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதி காரக்
கேடரைப் பொய்யலால் கிளத்தாப்

படுநிலை யவரைப் பார்த்த போ தெல்லாம்
பயந்தனன் சுத்த சன் மார்க்கம்
விடுநிலை உலக நடைஎலாங்கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய்"[69] என்கிறார்.

"கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க – தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று நினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து" [70] என்கிறார் இராமலிங்க அடிகளார்.

மேற்குறித்த கூற்றுபடியான பொதுவுடைமை கொண்ட ஆட்சி அமைந்தால் வறுமை ஒழியும், அனைவருக்கும் நிரந்தரமாக உணவு கிடைக்கும் என்பது இராமலிங்க அடிகளார் பாடல் மூலமாக அறிய முடிகிறது.

உலகில் வறுமை நிலையைக் கண்டு இராமலிங்க அடிகளார்,

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ ரறிந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேர் உறக் கண்டுளந் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைகளாய் நெஞ்
சிளைத்தவர் தன்மைக் கண்டே இளைத்தேன்"[71] என்கிறார்.

"எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே
இலகிய இறைவனே உலகில்
பட்டினி உற்றேறார் பசித்தனர் களையால்
பரதவிக் கின்றனர் என்றே
ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்
உள்ளம் பகீர் என நடுக் குற்றேன்
இட்ட இவ் வுலகில் பசி எனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே"[72] என்கிறார்.

"உள்ளலேன் உடையார் உண்ணவும் வரியார்
உறுபசி உழந்து வெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடும்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்"[73] என்கிறார்.

பசி நீக்கமாகிய ஜீவகாருணியத்தை இராமலிங்கர் வழியுறுத்துகிறார். மேலும் அவர் பசித்தவர்களுக்கு பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற ஜீவகாருணிய ஒழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரம்மச்சாரிகள், சமுசாரிகள், தபசிகள், சந்நியாசிகள், ஆண் ஜாதியர், பெண் ஜாதியர், வாத்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத் தக்கவென்பது கடவுளானையென்றறிய வேண்டும் என்கிறார்.[74]

தனது சுய உழைப்பின் பலனை உண்டு சிறிதளவு பிறருக்கு ஈந்து வாழ்பவனே உண்மை வழியைக் கண்டறிந்தவன் என்று குருநானக் கூறுவது குறிப்பிடத்தக்கது.[75]

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும் பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும், சீடரை ஆசிரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும் குடிகளை அரசன் தடுத்தாலும் அந்த தடைகளால் சிறிதும் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை அவரவரைச் சேருமல்லாது வேறிடத்திற் போகாதென்பதை உண்மையாக நம்பி ஜீவகாருணிய ஒழுக்கத்தை நடத்த வேண்டுமென்றும் அறிய வேண்டும் என்கிறார்.[76]

"தரைத்தலத் தியன்ற வாழ்க்கையில் வறுமைச்
சங்கடப் பாவியால் வருந்தி
நரைத்தவர் இளையவர் முதலினோர் எனையோர்
நண்பன் என் றவரவர் குறைகள்
உரைத்தபோ தெல்லாம் நடுங்கி என் னுள்ளம்
உடைந்ததுன் உளம் அறியாதோ" என்கிறார்.

"கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்த்தவர்க் கின்பம்
தரவும் வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க"[77] என்கிறார்.

"நிறமுறு விழிக்கீழ்ப் புறத்தோடு தோளும்
நிறை உடம் பிற்சில உறுப்பும்
உறவுதோல் தடித்துத் துடித்திடுந் தோறும்
உன்னிமற் றவை களை அந்தோ
பிறர்துயர் காட்டத் துடித்தவோ என்று
பேதுற்று மயங்கிநெஞ் சுடைந்தேன்......."[78] என்கிறார்.

இதனால் அறிவு விளங்கிய ஜீவர்களுக்கெல்லாம் ஜீவகாருணியமே கடவுள் வழிபாடென்றும் அறிய வேண்டும் என்கிறார்.

ஜீவகாருணிய ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுளருக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள்; அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்கலாகவும், நினைக்கப்படாது, ஜீவகாருணியமில்லாது செய்யப்படுகின்ற செய்கைகளெல்லாம் பிரயோஜனமில்லாத மாயாஜாலச் செய்கைகளே ஆகுமென்று அறிய வேண்டும் என்கிறார்.[79]

ஜீவகாருணியமுடையவர்கள் கடவுளைக் கண்டவர்களென்றும் கடவுளின்பத்தை அனுபவிக்கின்ற முக்தரென்றும் அறிய வேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் இந்த புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார்களாதலால், இவர்களே தெய்வமுமென்று உண்மையாக அறிய வேண்டும் என்கிறார்.

ஜீவகாருணிய ஒழுக்கமுடையவர்களாகிய ஜீவர்களைப் பசியென்கின்ற அபாயத்தினின்றும், நீங்கச் செய்கின்ற உத்தமர்கள், எந்த சாதியாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்த செய்கையுடையவர்களாயினும் தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையவர்களென்று சர்வ சக்தியுடைய கடவுள் சாட்சியாக சத்தியஞ் செய்யப்படுமென்று அறிய வேண்டும் என்கிறார்.[80]

இராமலிங்க அடிகளார்,

“மண்ணினீள் நடையில் வந்தவெந் துயரை
மதித்துளம் வருந்திய பிறர்தம்
கண்ணினீர் விடக்கண் டையவோ நானும்
கண்ணினீர் விட்டுளங் கவன்றேன்”[81] என்கிறார்.

"மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவுயுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்"[82] என்கிறார்.

"... மெய்யனே ஐயனே உலகில்
தொண்டனேன் தன்னை அடுத்தவர் நேயர்
சூழ்ந்தவர் உறவினர் தாயர்
கொண்டுடன் பிறந்தோர் அயலவர் எனும்இக்
குறிப்பினர் முகங்களில் இளைப்பைக்
கண்டபோ தெல்லாமல் மயங்கிஎன் னுள்ளம்
கலங்கிய கலக்கம் நீ அறிவாய்"[83] என்கிறார்.

"...ஆர்த்த இவ் வுலகில் அம்மையர் துணைவர்
அடுத்தவர் உறவினர் நேயர்
வேர்த்தமற் றயலார் பசியினால் பிணியால்
மெய்யுளம் வெதும்பிய வெதுப்பைப்
பார்த்தபோ தெல்லாம் பயந்தென துள்ளம்
பதைத்ததுன் உளம்அறி யாதோ"[84] என்கிறார்.

எனவே அவர் 23-05-1867[85] ஆம் ஆண்டு சத்திய தரும சாலையை வடலூரில் தொடங்கி வைத்து மக்களின் பசிப் பிணியைப் போக்கினார்.

உயிர்களிடத்தில் அன்பும், மதிப்புமுடைய இராமலிங்க அடிகள் கொலை, புலையை வெறுத்தாலும் அச்செயல்களைச் செய்வோர்க்கும் பசிப்பிணியை போக்க ஏற்பாடு செய்தார்.

"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர் அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்புறும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக"[86] என்கிறார்.

"வன்புடையார் கொலைகண்டு புலைஉண்பார் சிறிதும்
மரபினர்அன் றாதலினால் வகுத்தஅவர் அளவில்
அன்புடைய என்மகனே பசிதவிர்த்தல் புரிக" [87] என்கிறார்.

இவ்வாறு ஜீவகாருணிய ஒழுக்கத்தின் எல்லையாக பசி நீக்கத்தையே இராமலிங்க அடிகளார் வழியுறுத்துகிறார் என்பதை அறிய முடிகிறது.

## 3.6. சமரச சுத்த சன்மார்க்கம்

சமரச சுத்த சன்மார்க்கமாக இராமலிங்க அடிகளார் கூறுவது "எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிவான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன : தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்' ஆகும்.

சுத்த சன்மார்க்கமாவது குண நிர்குண வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதங்களினது அனுபவமன்று. சுத்த சன்மார்க்க மென்பது சக சன்மார்க்கமேயாம். சுத்த மென்பது ஒன்றுமில்லாதது. ஆதலால், சுத்தமென்பது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன் வந்தமையால், முன் சொன்ன சமய மதங்களைத் தாண்டினது, அதன் அனுபவங்களையும் கடந்தது"[88] என்கிறார்.

சன்மார்க்கம் என்பது ஞானயோகம் என்கிறார்,

சரியை – தாசமார்க்கம் – எல்லா உயர்களையும் தன் அடிமையாக பாவித்தல்
கிரியை – சற்புத்திரமார்க்கம் – எல்லா உயிர்களையும் தன் மகனாகப் பாவித்தல்
யோகம் – சகமார்க்கம் – எல்லா உயிர்களையும் தன் நட்பாக பாவித்தல்
ஞானம் – சன்மார்க்கம் – எல்லா உயிர்களையும் தன்னைப் போல் பாவித்தல்[89]

என்று சன்மார்க்க புதிய விளக்கமாக இராமலிங்க அடிகள் கூறுகிறார்.

சமரச சன்மார்க்கம் என்பது ஞானயோகம் என்பதை இராமலிங்க அடிகளார்,

காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்தார், ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால், காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகின்ற பட்சத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகைகளிடவும் சம்மதம் வருமா? இப்படி விசாரித்துப் பிரபஞ்ச போகத்தின் கண் அலட்சியம் தோன்றினால் நிராசை உண்டாம். ஆதலால் சரியை முதலிய சாதகம் நான்கில், மூன்றாவது படியாகிய ஞானத்தில் யோகம் செய்கின்ற பலனாகிய நிராசை என்றும் படி உண்டாகிறது. ஆகையினாலே இந்த விசாரத்திலிருந்து கொண்டிருகங்கள் என்கிறார்.[90]

எனவே சமரச சுத்த சன்மார்க்கம் என்பது ஞான யோகம் ஆகும். எவ்உயிரும் தன்னுயிர் போல் பார்த்தலே சமரச சுத்த சன்மார்க்கத்தின் இலட்சியம் ஆகும். இதை இராமலிங்க அடிகளார் “ நானும் நீயும் ஒன்றென்றுரைத்து நல்கு சோதியே ” [91] என்கிறார்.

சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கியத் தடைகளாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றைக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை, புலை

தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாவர். மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் – இவை முதலியவற்றை தவிர்த்துக் கொள்வர்கள்! என்கிறார்.[92]

மலஜல சங்கல்ப காலத்தில் தவிர, மற்றக் காலங்களில் கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்த வேண்டும். பக்தி என்பது மன நெகிழ்ச்சி, மனவுருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருத்தலை அறிதலே ஈஸ்வர பக்தியாகும் என்கிறார்.[93]

"யோகம் செய்தல் வேண்டுவதில்லை, அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம்.
சதா சிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை ; மூடம் உண்டாகும். உண்மை"[94]

"சமாதிப் பழக்கம் பழக்கமல்ல ; சகசப் பழக்கமே பழக்கம்"[95] என்கிறார்.

யோகத்தில் எட்டவாது நிலையியாகிய சமாதி நிலையில் எவ்வுயிரும் தன்னுயிராக இருப்பதை உணர்வதை விட, மிக எளிதாக ஜீவகாருணியத்தின் மூலம் அறிய முடியும் என்பதை அறிய முடிகிறது.

சமரச சுத்த சன்மார்க்கத்திற்கு சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக் கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதை கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால் காலந் தாழ்ந்தாது எல்லாஉயிரையும் தன்னுயிரைப் போல் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளவேண்டும். இதுவே சாதனம் என்கிறார்.[96]

நம்முடைய தலைவராகிய கடவுள் நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லது வேறு வகையால் அடைவது அரிது. அவ்வன்பு ஜீவகாருணியத் தாலல்லது வேறுவகையால் வராது. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகமல் நடத்தலே ஜீவகாருணியம். இதுதான் சித்திபெறுவதற்கு முதற்படியாக விருக்கின்றது என்கிறார்.[97]

## 3.7. சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகள்

இராமலிங்க அடிகளார் சமரச சுத்த சன்மார்க்க நிலையை அடைவதற்கு சில கொள்கைகளை வகுத்தருளினார். எவ்வுயிரும் தம்முயிர் என்பதை உணர்ந்து சாகாத நிலையை அடைவது சன்மார்க்க முடிவு ஆகும். ‘சாகாதவனே சன்மார்க்கி’ என்றும், ‘எம் மார்க்கம் இறப் பொழிக்கும் சன்மார்க்கம்’ ஆகும். இராமலிங்க அடிகளார் கூற்றுப்படி சன்மார்க்கத்தின் முடிவு ஆகிய சாகதநிலையை அடைய கீழ்க்கண்ட சமரச சுத்த சன்மார்க்க கொள்கைகளைப் பின்பற்றினால் மரணமிலாப் பெருவாழ்வு அடையமுடியும் என்கிறார்.

### கடவுள்

இராமலிங்க அடிகளாரைப் பொருத்த வரை கடவுள் ஒருவரே ஆவார்.

அவர் தம் திருவருட்பா பாடலில்,

“உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும்
ஒருவ ரேஉளார் கடவுள் கண் டறிமினோ உலகுளீர் உணர்வின்றி
இருவ ராம் என்றும் மூவரே யாம் என்றும் இயலும் ஐ வர்கள் என்றும்
எருவ ராய்உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டுமூன் றெனலாமே”[98]

கடவுள் உருவம் உடையவராக, உருவம் அற்றவாராக, அருவம் உருவம் உடையவராக ஒருவரே உள்ளார். கடவுள் ஒன்றுக்கு மேற்பட்டது என்பது உடலுக்கு உயிர் இரண்டு மூன்று என்பதைப் போல, எனவே கடவுள் ஒருவரே என்கிறார் இராமலிங்க அடிகளார்.

“தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்

பொய்ச்சமயாதியை மெச்சுகின் றாரும்

மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன்றில்லார் ” [99] என்கிறார்.

மேலும் “கடவுள் சர்வஜீவ தயாபரர், ஆகையால் சர்வ வல்லபமுடையவர் அதுபோல் நம்மையும் சர்வ ஜீவதயையுடையவர்காளய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக் கொள்ளும்படி செய்வார்.

யாரிடத்தில் தயவு அதிகப்பட்டிருக்கிறதோ, அவரிடத்தில் கடவுள் இருக்கிறார். அந்த தயையில்லாதவர்களிடத்துக் கடவுள் இருந்தும் இல்லாமையாயிருகின்றார். கடவுளிடத்தில் சதா அன்பும் பக்தியும் செலுத்த வேண்டும்.

ஈசுவர பக்தி என்பது எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதல்” [100]

எனும் இராமலிங்க அடிகளின் வரிகள் ஒரு கடவுள் தான் படைப்பவராகவும், அவன் படைப்புகளாகவும் விளக்குகிறான் என்பதை அறிய முடிகிறது. மேலும் சிவம் என்ற ஒன்றையே ஒரே கடவுளாகக் கொண்டார். “கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக” [101] என்கிறார்.

“எல்லாந்தான் உடையதுவாய் எல்லாம்வல் லதுவாய்
எல்லாந்தான் ஆனதுவாய் எல்லாந்தான் அலதாய்ச்
சொல்லாலும் பொருளாலும் தோன்றும்அறி வாலும்
துணிந்தளக்க முடியாதாய்த் துரியவெளி கடந்த
வல்லாளர் அனுபவத்தே அதுஅதுவாய் அவரும்
மதித்திடுங்கால் அரியதுவாய்ப் பெரியதுவாய் அனுவும்
செல்லாத நிலைகளிலும் செல்லுவதாய் விளங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர் ”[102] என்கிறார்.

"ஆதியிலார் அந்தமிலார் அருட்பெருஞ்சோ தியினார்
என்று கனல் மதிஅகத்தும் புறத்தும் விளங்கிடுவார்
யாவும் இலார் யாவும் உளார் யாவும் அலார்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருசிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் ஒருவர்உண்டே கண்டீர்!" [103]

என்கிறார்இராமலிங்க அடிகளார்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"[104]
"ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்"[105]

என்ற திருமூலரின் திருமந்திரம் பாடல் வரிகளும் தெய்வம் ஒன்று என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

கடவுள் ஒருவரே அவரை ஒளி வடிவில் (ஜோதி வடிவில்) வழிபட வேண்டும் என்கிறார் இராமலிங்க அடிகளார்,

"ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர்
ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ் ஜோதி"[106]
"சூரிய சந்திர சோதியுட் சோதி என்று
ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ் ஜோதி"[107]
"முச்சுடர் களும் ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுட ராம்சபை அருட்பெருஞ் ஜோதி"[108]
"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அரும்பெருஞ்ஜோதி" என்கிறார்.

ஒரே கடவுள் ஜோதி வடிவிலும் அவர் கருணை மயமானவர் என்றும் இராமலிங்க அடிகளார் கூறுகின்றார்.

"திருவையா றகலாத செம்பொற் சோதி  என்று அப்பரும்
சோதியே சுடரே  சூழொளி விளக்கே
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி
என்று மாணிக்க வாசகரும்,
சுத்த நிர்க்குணமான பரதெய்வமே பரஞ்சோதியே" [109]

என்று தாயுமானவரும் கடவுளை சோதி வடிவில் அழைத்தனர் என்பது குறிப்பிடதக்கது ஆகும்.

இராமலிங்க அடிகளார் சிறு தெய்வ வழிபாடு கூடாது என்கிறார். கடவுள் ஒன்று என்பதால் சிறு தெய்வ வழிபாட்டை எதிர்கிறார்.

"அருட்சோதித் தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்
பொருட் சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்த தெய்வம் உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கி ஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணியவா றெனக் கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்" [110]

இராமலிங்க அடிகளார் அருட்பெருஞ்சோதி ஒன்றையே தெய்வம் என்கிறார்.

"நான்முகர்நல் உருத்திரர்கள் நாராயணர் இந்திரர்கள்
நவில் அருகர் புத்தர் முதல் மதத்தலைவர் எல்லாம்
வான்முகத்தில் தோன்றி அருள் ஒளிசிறிதே அடைந்து
வான கத்தும் வையகத்தும் மனம்போன படியே

தேன்முகந்துண் டவர் எனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டம் என அருட்பெருஞ்சோதியினால்
தான்மிகக்கண் டறிக எனச் சாற்றியசற் குருவே
சபையில் நடத் தரசேஎன் சாற்றும் அணிந் தருளே" [11]

என்று சிறு தெய்வ வழிபாட்டை எதிர்கிறார்.
அத் தெய்வங்களின் பேரால் உயிர்பலி கூடாது என்கிறார்,

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்தி நோந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்" [12] என்கிறார்.

மேலும் சமரச சுத்த சன்மார்க்க கொள்கையாக இராமலிங்க அடிகளார் ஆன்மநேய ஒருமைப்பாடாக புலால் மறுப்பைக் கூறுகின்றார். சமரச சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாடு ஆகும்.

## 3.8. ஆன்மநேய ஒருமைப்பாடு

"உயிர்க் கொலையும் புலைப் புசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர், அவர் புறவினத்தார்" [13]என்ற பாடலில் உயிர்கள் மேல் இராமலிங்கஅடிகள் கொண்ட மதிப்பும். கருணையும் தெரிகிறது.

“வன்புடையார் கொலை கண்டு புலை உண்பர் சிறிதும் மரபினர் அன்று” [14]

“கொடியவரே கொலை புரிந்து புலை நுகர்வார் ” [15]

என்கிறார் இராமலிங்க அடிகளார்.

“கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்று

அல்லாதார் யாரோ அறியென் பராபரமே” [16] என்கிறார் தாயுமானவர்.

உயிர்களைக் கொல்லாத விரதத்தை மேற்கொண்டவர்களே நல்லோர் என்றும் மற்றவர்கள் கொடியவர்கள் என்றும் தாயுமானவர் கூறுவது குறிப்பிடதக்கது ஆகும்.

“தன்ஊன் பெருக்கற்குத் தான் பிறி தூண் உண்பான்

எங்ஙனம் ஆளும் அருள்” [17]

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்” [18] என்கிறார் திருவள்ளுவர்.

என்று கொல்லைமை, புலால் உண்ணாமையை பற்றி திருவள்ளுவர் கூறுவது குறிப்பிடதக்கது ஆகும்.

“மருவாணைப் பெண்ணாக்கி ஒரு கணத்தில்

கண்விழித்து வயங்கும் அப்பெண்

உருவாணை உருவாக்கி இறந்தவரை

எழுப்புகின்ற உறுவ னேனும்

கருவாணை யுறஇரங்கா துயிரும்பைக்

கடித்துண்ணங் கருத்த னேல்எங்

குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை

ஞானி எனக் கூறா ணாதே” [19] என்கிறார்.

எல்லா சித்திகளையும் பெற்றிருந்தாலும் புலால் உண்பவனை ஞானி என்று கூற மாட்டேன் என்கிறார் இராமலிங்க அடிகளார்.

## சாதி மற்றும் சமயம்

சமரச சுத்த சன்மார்க்கதிற்கு சாதி, சமய முதலிய வேறுபாடு கூடாது என்கிறார் இராமலிங்க அடிகளார்.

"சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதி அ நாதியாம் அருட்பெருஞ்ஜோதி" [120] என்கிறார்.

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி"[121] என்கிறார்.

"நால் வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே
மேல் வருணம் தோல் வருணம் கண்டறிவார் இலை நீ
விழித்திது பார் என்றெனக்கு விளம்பியசற் குருவே"[122] என்கிறார்.

"சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் இயற்கை உண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் அருட் சக்தியால் பூதகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்ட படியால் இச் சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களே யாகும்.

சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமை உள்ள சகோரர்களே யாவர்"[123] என்கிறார்.

"இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுந் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்" [124] என்கிறார்.

"பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடுமோர்
பவநெறி இதுவரை பரவியது இதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்துஇறந்து உலகோர்
செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமுது அருள்கின்ற சுத்த சன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே!
தனிநட ராஜஎன் சற்குரு மணியே" [125] என்கிறார்.

"மார்க்கம்எலாம் ஒன்றாகும் மாநிலத்து வாய்மைஇது
தூக்கம்எலாம் நீங்கித் துணிந்துளத்தே – ஏக்கம்விட்டுச்
சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம் நீர்
நன்மார்க்கம் சேர்வீர் இந் நாள்" [126] என்கிறார்.

"சாதி சமயச் சழக்கெல்லாம் அற்றது சன்மார்க்க ஞானசபை நிலை பெற்றது" [127]

மேற்கண்ட இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா பாடல்வரிகள் சாதி சமயத்தை கடந்த "சமரச சுத்த சன்மார்க்கத்தை" வழியுறுத்துகின்றது என்பதை அறிய முடிகிறது.

## உயிர் இரக்கம்

எவ்வுயிரும் தம் உயிரைபோல் எண்ணி ஒழுகுவதே உயிர் இரக்கம் ஆகும்,

"எவ்வுயிரும் பொது எனக் கண்டிரங்கிஉப
கரிக்கின்றார் யாவர்; அந்தச்

செவ்வியர்தம் செயல் அனைத்தும் திருவருள்
செயல் எனவே தெரிந்தேன் இங்கே
கவ்வை இலாத் திருநெறி அத்திருவாளர்
தமக்கேவல் களிப்பால் செய்ய
ஒவ்விய தென் கருத்தவர்சீர் ஓதிடஎன்
வாய்மிகவும் ஊர்வதாலோ" [128] என்கிறார்.

"எவ்உயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருள்கருணை செய்யாய் பராபரமே" [129]

என்று தாயுமானவர் கூறுவது குறிப்பிடதக்கது ஆகும்.

இராமலிங்க அடிகளார் ஆன்ம நேய ஒருமைப்பாடாக,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை உளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்"[130].

"வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில் என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்
உருவஎன் உயிர்தான் உயிர்இரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில் என் உயிரும் ஒருவும்என் உள்ளத்து
ஒருவனே நின்பதத் தாணை!"[131] என்கிறார்.

"உயிருள் யாம் எம்முள் உயிர்இவை உணர்ந்தே
உயிர்நலம் பரவுகென் றுரைத்தமெய்ச் சிவமே" [132] என்கிறார்.

"எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்தாலோ"[133] என்கிறார்.

"கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரும்
தம்உயிர்போல் கண்டு ஞானத்
தெருள்நெறியில் சுத்தசிவ சன்மார்க்கப்
பெருநீதி செலுத்தா நின்ற
பொருள் நெறிசற் குணசாந்தப் புண்ணியர்தம்
திருவாயால் புகன்ற வார்த்தை
அருள்நெறிவே தாகமத்தின் அடிமுடி சொல்
வார்த்தைகள் என் றறைவ ராலோ"[134]

என்கிறார் இராமலிங்க அடிகளார்.

இவ்வாறு ஆன்மாவின் எல்லையற்ற விரிவை உணர்ந்து தயவை விருத்தி செய்து கொண்டால் மரணமிலாப் பெருநிலையை அடையமுடியம் என்று சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளாக இராமலிங்க அடிகளார் கூறுவதை அறிய முடிகிறது.

## குறிப்புகள்

1. ஊரன் அடிகள்,"வள்ளலாரும் காந்தியடிகளும்", ப. 1.

2. பிளேட்டோ,"குடியரசு", ப. 76.

3. ஊரன் அடிகள்,"புரட்சித்துறவி வள்ளலார், ப. 94-96.

4. சுவாமி சரவணானந்தா,வள்ளலார் வாழ்க்கையும் தத்துவமும்", ப. 89.

5. பொதுமை வெளியீடு,"மார்க்ஸ் நினைவாக", ப. 3-4.

6. Wayhe Weiten,"Psychology Themes and Variations", p. 343-345.

7. திருவள்ளுவர்,"திருக்குறள்", பா. 457.

8. தெய்வநிலைய வெளியீடு, "உரைநடைப் பகுதி", ப. 99.

9. திருவள்ளுவர், "திருக்குறள்", பா.வ. 225.

10. வர்த்தமான பதிப்பகம்,"உரைநடைப் பகுதி", ப. 146.

11. மேலது ., தெய்வநிலைய வெளியீடு, ப. 100.

12. மேலது ., வர்த்தமான பதிப்பகம், ப. 153.

13. மேலது ., ப. 155.

14. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 144.

15. தெய்வநிலையவெளியீடு,"உரைநடைப்பகுதி", ப. 112.

16. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 165.

17. மேலது ., ப. 165.

18. மேலது ., ப. 129.

19. பட்டினத்தார்,"பூரணமாலை", பா.வ. 68.

20. திருமூலர்,“திருமந்திரம்”, பா.வ. 705.

21. மேலது ., பா.வ. 704.

22. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 136.

23. தெய்வநிலைய வெளியீடு,“உரைநடைப் பகுதி”, ப. 122.

24. மேலது ., வர்த்தமான பதிப்பு, ப. 167.

25. மேலது ., ப. 167.

26. மேலது ., ப. 122.

27. ஔவையார்,“நல்வழி” , பா.வ. 11.

28. மேலது ., பா.வ. 26.

29. “மணிமேகலை”, பா.வ. 11 : 93–94.

30. மேலது ., பா.வ. 11: 96.

31. மேலது ., பா.வ. 12 : 116–118.

32. மேலது ., பா. 10: 90.

33. “புறநானூறு”, பா. 173.

34. “திருக்குறள்” , பா. 1062.

35. “மேலது” ., பா. 227.

36. “சிலப்பதிகாரம்”, பா.வ. 5 : 71–73.

37. “திருவருட்பா, உரைநடைப் பகுதி”, ப. 123–126.

38. பொதுமை வெளியீடு,“மார்க்ஸ் நினைவாக....”, ப. 14–15.

39. ம.பொ.சிவஞானம்,“வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 145.

40. “மனுதர்மம்”, அத்தியாயம்–1, ஸ்லோகம், பா.வ. 87–91.

41. ஊரன் அடிகள்,“இராமலிங்க அடிகளார் வரலாறு”, ப. 417-418.

42. ந.முத்துமோகன்,“தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல்”, ப. 147.

43. முன்னேற்றப் பதிப்பகம்,“புரட்சி என்றால் என்ன?”, ப. 15.

44. V.I.Lenin,“collected works’’, p. 290-291.

45. முன்னேற்றப் பதிப்பகம்,“ புரட்சி என்றால் என்ன?”, ப. 14-15.

46. ந. முத்துமோகன்,“மார்க்சியக் கட்டுரைகள்”, ப. 701-702.

47. ஊரன் அடிகள்,“வள்ளலாரும் பாரதியாரும்”, ப. 42.

48. “திருவருட்பா”, பா. 4615, 211-212.

49. மேலது ., பா. 5453.

50. மேலது ., பா. 5805.

51. மேலது ., பா. 5566.

52. ப. மருதநாயகம் ,“வள்ளலார் முதல் சிற்பிவரை”, ப. 35.

53. “அகத்தியர்”, பா. 1-2.

54. மேலது ., பா. 4-3.

55. “திருவருட்பா”, பா. 4654.

56. மேலது ., பா. 4174.

57. மேலது ., பா. 4949.

58. மேலது ., பா. 4913.

59. மேலது ., பா. 4503.

60. “திருவருட்பா”, பா. 5556.

61. மேலது ., பா. 3463.

62. மேலது ., பா. 5561.

63. பொதுமை வெளியீடு,“மார்க்ஸ் நினைவாக...”, ப. 14–15.

64. கீதா “புதிய தலைமுறை”, (02 பிப்ரவரி 2012), ப. 18.

65. பழனியப்பா பிரதர்ஸ்,“பாரதியார் கவிதைகள்”, ப. 37.

66. ஊரன் அடிகள், “வள்ளலாரும் பாரதியாரும்”, ப. 42.

67. முனைவர். அமுதன்,“அறம் எனப்படுவது....”, ப. 7.

68. ம.பொ.சிவஞானம், “வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு”, ப. 309.

69. மேலது ., ப. 308.

70. மேலது ., ப. 307.

71. “திருவருட்பா”, பா. 3471.

72. மேலது ., பா. 3431.

73. மேலது ., பா. 5382.

74. “திருவருட்பா, உரைநடைப்பகுதி”, ப. 130.

75. ந.முத்து மோகன்,“மார்க்சிய கட்டுரைகள்”, ப. 336.

76. “திருவருட்பா, உரைநடைப் பகுதி”, ப. 130–131.

77. “திருவருட்பா”, பா. 3407.

78. மேலது ., பா. 3435.

79. “திருவருட்பா, உரைநடைப் பகுதி”, ப. 127.

80. “திருவருட்பா, உரைநடைப் பகுதி”, பா. 131.

81. “திருவருட்பா”, பா. 3466.

82. மேலது ., பா. 3408.

83. மேலது ., பா. 3418.

84. மேலது ., பா. 3419.

85. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 333.

86. "திருவருட்பா", பா. 4160.

87. மேலது ., பா. 4161.

88. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 153.

89. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 278.

90. மேலது ., பா. 275.

91. "திருவருட்பா ., பா. 5059.

92. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 240.

93. மேலது ., ப. 222.

94. மேலது ., பா. 233.

95. மேலது ., பா. 222.

96. மேலது ., பா. 133.

97. மேலது ., பா. 134.

98. "திருவருட்பா", பா. 5384.

99. மேலது ., பா. 4726.

100. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு". ப. 216.

101. "திருவருட்பா", பா. 3503.

102. மேலது ., ப. 3274.

103. மேலது ., பா. 3282.

104. திருமூலர்,"திருமந்திரம்", பா. 2104.

105. மேலது ., பா. 2962.

106. "திருவருட்பா", அகவல், பா. 4615, பா.வ 581-582.

107. மேலது ., பா. 283-284.

108. மேலது ., பா. 63-64.

109. ஊரன் அடிகள்,"இராமலிங்க அடிகளார் வரலாறு", ப. 412.

110. "திருவருட்பா, பா. 3904.

111. மேலது ., பா. 4178.

112. மேலது ., பா. 3472.

113. மேலது ., பா. 4160 .

114. மேலது ., பா. 4161.

115. மேலது, பா 4162.

116. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 324.

117. மேலது ., பா. 324.

118. மேலது ., பா. 325.

119. "திருவருட்பா", பா. 3027.

120. "திருவருட்பா", பா. 4615, அகவல், பா.வ. 115-116.

121. மேலது ., பா. 211-212.

122. மேலது ., பா. 4174.

123. ம.பொ.சிவஞானம்,"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு", ப. 123.

124. மேலது ., ப. 124.

125. மேலது ., ப. 154.

126. மேலது ., ப. 151-152.

127. "திருவருட்பா", பா. 4913.

128. மேலது ., பா. 5296.

129. "தாயுமானவர் பாடல்கள்", பராபரக் கண்ணி, பா. 65.

130. "திருவருட்பா", பா. 4082.

131. மேலது ., பா. 3506.

132. மேலது ., பா. 4615, அகவல், பா.வ. 973-974.

133. "திருவருட்பா", பா. 5297.

134. மேலது ., பா. 5298.